## பத்திரிக்கைச் செய்தி

சென்னை மாவட்டம், பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் செயல்படும் சத்துணவு மையங்களில் காலியாக உள்ள 179 சமையல் உதவியாளர் பணியிடங்கள் நேரடியாக நியமனம் செய்யப்படவுள்ளன. நேரடி நியமனம் செய்யப்படவுள்ள சமையல் உதவியாளர் பணியிடங்களின் இனசுழற்சி விவரங்களை "கூடுதல் கல்வி அலுவலர், கல்வித்துறை/சத்துணவுப்பிரிவு அம்மா மாளிகை, பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை-600 003 மற்றும் 1 முதல் 15 மாநகராட்சி மண்டலங்களில் தெரிந்து கொள்ளலாம்.

மாதிரி விண்ணப்ப படிவங்கள் பெருநகர சென்னை மாநகராட்சி, தலைமையகம் (ரிப்பன் மாளிகை, சென்னை-03) மற்றும் 1 முதல் 15 மாநகராட்சி மண்டலங்களில் தகவல் பலகையில் ஒட்டப்படும்.. விண்ணப்பங்களை https://chennaicorporation.gov.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை தகுந்த ஆவணங்களுடன் இணைத்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலங்கள் 1 முதல் 15 அலுவலகங்களிலும் மற்றும் மாநகராட்சி தலைமையகத்திலும் ஒப்படைக்கலாம்.

தொகுப்பூதிய விவரம் : தொகுப்பூதியத்தில் பணி நியமனம் செய்யப்படும் சத்துணவு சமையல்' உதவியாளர்கள் தொடர்ந்து பன்னிரெண்டு மாத காலம் பணியினை முடித்தபின் அவர்கள் சிறப்பு காலமுறை ஊதியத்தின் கீழ் ஊதியம் பெறுவர்.

| ஊதிய விவரம் | சத்துணவு சமையல் உதவியாளர் |
|---|---|
| தொகுப்பூதிய மாதமொன்றுக்கு (ஒரு ஆண்டு காலத்திற்கு) | ரூ.3000/- |
| பன்னிரெண்டு மாத காலத்திற்கு பின் வழங்கப்படும் சிறப்பு காலமுறை ஊதியம் மாதமொன்றுக்கு | ஊதிய நிலை 1(Level of Pay -ரூ.3000-9000) என்ற விகிதம் |

இப்பணிக்கு 21 வயது முதல் 40 வயதுடைய பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம். வயது நிர்ணயம் அறிவிப்பு தேதியினை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படும்.

<u>வயது வரம்பு</u>

1. 21 முதல் 40 வரை (பொது மற்றும் தாழ்த்தப்பட்டோர்)
2. 20 முதல் 40 வரை (விதவை, கணவரால் கைவிடப்பட்டவர்)

குறைந்தப்பட்ச கல்வித் தகுதி 10ஆம் வகுப்பு தோல்வி / தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தமிழில் சரளமாக எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். நியமனம் கோரும் மையத்திற்கும் விண்ணப்பதாரரின் குடியிருப்பிற்கும் இடைப்பட்ட தூரம் 3 கிமீக்குள் இருக்க வேண்டும்

மாற்றுத் திறனாளிகள் ஒதுக்கீட்டில் 4% சதவீதம் இட ஒதுக்கீடு கீழ்கண்ட குறைபாடு உள்ளவர்கள் மட்டும் (உரிய அடையாள அட்டையுடன்) விண்ணப்பிக்க வேண்டும்.

1. குறைவான பார்வைத் திறன் (மூக்குக்கண்ணாடி மூலம் சரி செய்யப்பட்டது
2. உடல் இயக்க குறைபாடு (ஒரு கால்)

3. குணப்படுத்தப்பட்ட தொழுநோய் (40% கைகளின் முழு செயல்பாட்டுதிறன். உணர்திறன் மற்றும் செயல்திறன் உள்ளடக்கியது)
4. திரவ வீச்சினால் பாதிக்கப்பட்டவர்கள்
5. குறிப்பிட்ட கற்றல் திறன் குறைபாடு (மிதமான)
6. காதுகேளாதோர் (கருவி பொறுத்தப்பட்டவர்)
7. குள்ளத்தன்மை கொண்டவர்

விதவைகள், கணவரால் கைவிடப்படோர் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு 25 சதவீதம் இடஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்க வேண்டிய கடைசி **நாள்**: 30.04.2025 **மாலை** 5.45 மணி வரை மட்டுமே அதற்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்களின் நகல்கள்.

1. பள்ளி மாற்றுச் சான்றிதழ்
2. SSLC மதிப்பெண் சான்றிதழ்
3. குடும்ப அட்டை
4. இருப்பிட சான்று
5. ஆதார்அட்டை
6. சாதிச் சான்று
7. விதவை, கணவரால் கைவிடப்பட்டோர் மற்றும் ஆதரவற்ற பெண்கள் சான்றிதழ்
8. மாற்றுத் திறனாளிகள் அதற்கான சான்றிதழ்

மேற்கண்ட சான்றிதழ்களின் நகல்கள் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். அஞ்சல் துறையின் மூலம் காலிப் பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி "கூடுதல் கல்வி அலுவலர், கல்வித்துறை/சத்துணவுப்பிரிவு அம்மா மாளிகை பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை-600 003" அவ்வாறு அஞ்சலில் அனுப்பப்படும் போது ஏற்படும் காலதாமதங்களுக்கு துறை பொறுப்பேற்காது. தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். நேர்முகத் தேர்வின் போது அசல் சான்றுகளுடன் கலந்து கொள்ள வேண்டும்.

வேறு அலுவலகங்களிலோ மற்ற அலுவலர்களிடமோ அளிக்கப்படும் மனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது உரிய சான்றிதழ்கள் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்

காரணம் எதும் குறிப்பிடாமல் நியமன அறிவிப்பு அறிக்கையினை இரத்து செய்வதற்கு /திரும்ப பெறுவதற்கு / திருத்துவதற்கு / கெடு தேதியினை நீட்டிப்பதற்கு நியமன அலுவலருக்கு முழு உரிமையுண்டு என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**விண்ணப்பப் படிவம்**

## சமையல் உதவியாளர் பணியிடங்களுக்கான விண்ணப்பம்

| மாவட்டம் | விண்ணப்பிக்கும் பள்ளியின் பெயர் | சமீபத்தில் எடுக்கப்பட்ட புகைப்படத்தினை ஒட்டவும் |
|---|---|---|
| சென்னை | | |

| | |
|---|---|
| விண்ணப்பதாரரின் பெயர் | |
| தந்தை/கணவர் பெயர் | |
| கைபேசி எண் | |
| விண்ணப்பதாரரின் இருப்பிட முகவரி (குடும்ப அட்டையில் உள்ளபடி) மற்றும் வட்டாட்சியர் அவர்களிடமிருந்து பெறப்பட்டது. | |
| மாநகராட்சி வட்டத்தின் பெயர் | |
| கல்வித் தகுதி (சான்று இணைக்கப்பட வேண்டும்) குறைந்த பட்சம் 10 தோல்வி/தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தமிழில் கட்டாயம் எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். | |
| பிறந்த தேதி/வயது | |
| சாதி மற்றும் உட்பிரிவு (வட்டாட்சியர் சான்று இணைக்கப்பட வேண்டும்) | |

| | |
|---|---|
| மாற்றுத்திறனாளி (ஆம் எனில் மாற்றுத் திறனாளி அடையாள அட்டை இணைக்கப்பட வேண்டும்) | ஆம்/இல்லை |
| ஆதரவற்ற விதவை/ஆதரவற்ற பெண்/கணவரால் கைவிடப்பட்டவரா ? ஆம் எனில் வட்டாட்சியரின் சான்று இணைக்கப்பட வேண்டும் | ஆம்/இல்லை |
| பணியிடம் கோரும் மையம்/பள்ளியின் பெயர் | |
| விண்ணப்பதாரரின் இருப்பிடத்திற்கும் பணியிடம் கோரும் மையத்திற்கும் இடைப்பட்ட தூரம் (மூன்று கிலோமீட்டருக்குள் இருத்தல் வேண்டும்) | |

நாள் ;

இடம் :

விண்ணப்பதாரரின் கையொப்பம்

இணைப்பு :

1. பள்ளி மாற்றுச்சான்றிதழ் நகல்
2. SSLC மதிப்பெண் சான்றிதழ் நகல்
3. குடும்ப அட்டை நகல்
4. ஆதார் அட்டை நகல்
5. சாதிச் சான்றிதழ் நகல்

## நிபந்தனைகள்

1. சமையல் உதவியாளர் பணியிடத்திற்கு பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.
2. சமையல் உதவியாளர் பணியிடத்திற்கு விண்ணப்பம் செய்திட 21 வயது முதல் 40 வயதிற்குட்பட்ட பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.
3. நேர்காணலுக்கு வருகை தர போக்குவரத்து செலவினம் வழங்கப்படமாட்டாது.
4. தமிழில் சரளமாக எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.
5. இப்பணிக்கு 21 வயது முதல் 40 வயதுடைய பெண்கள் மட்மே விண்ணப்பிக்க வேண்டும்.
6. வயது நிர்ணயம் அறிவிப்பு தேதியினை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படும்.

வயது வரம்பு

1. 21 முதல் 40 வரை (பொது மற்றும் தாழ்த்தப்பட்டோர்)
2. 18 முதல் 40 வரை (பழங்குடியினர்)
3. 20 முதல் 40 வரை (விதவை, கணவரால் கைவிடப்பட்டவர்

- குறைவான பார்வைத் திறன் (மூக்குக்கண்ணாடி மூலம் சரி செய்யப்பட்டது). உடல் இயக்க குறைபாடு (ஒரு கால்) குணப்படுத்தப்பட்ட தொழுநோய் (40 % கைகளின் முழு செயல்பாட்டுதிறன். உணர்திறன் மற்றும் செயல்திறன் உள்ளடக்கியது). திரவ வீச்சினால் பாதிக்கப்பட்டவர்கள். குறிப்பிட்ட கற்றல் திறன் குறைபாடு (மிதமான), காதுகேளாதோர் (கருவி பொறுத்தப்பட்டவர்) குள்ளத்தன்மை கொண்டவர் சான்றிதழ் ஆகியவை சமர்ப்பிக்க வேண்டும்.
- விண்ணப்பங்களை தபால் / அஞ்சல் மூலம் சென்னை மாநகராட்சி அலுவலகத்திற்கு அனுப்பும் போது ஏற்படும் கால தாமதங்களுக்கு துறை பொறுப்பாகாது.
- பத்திரிக்கை செய்தி அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள தேதிக்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் கட்டாயமாக ஏற்றுக்கொள்ளப்படாது.